முச்சந்தி முரளி



"வழக்கு மேல வழக்கு வந்து வீட்டைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் யாரைச் சேரும்?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 324

செவ்வாய்க்கிழமை
15 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# தமிழரசுக் கட்சிக்கு எதிராக கட்சி உறுப்பினர் வழக்கு!

## மத்தியகுழுத் தீர்மானங்களை வறிதாக்குமாறும் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுத் தீர்மானங்களை வறிதாக்குமாறு கோரி யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு அடுத்த மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.**

10

## அரசமைப்புச் சீர்திருத்தம்: கவனம் செலுத்திய ஐ.நா.

கொழும்பு, ஒக். 15
ஆட்சி நிர்வாகம், அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

11

## சிவராம் படுகொலை மாத்திரமல்ல இன்னும் பல சம்பவங்கள் உண்டு



### கடந்த கால அரசுகளைப்போன்று அநுரவும் ஏமாற்றக்கூடாது என்கிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஒக். 15
சிவராம் படுகொலை மட்டுமல்ல வடக்கில் ஊடகத்துறை சார்ந்து நடந்த படுகொலைகள், கடத்தல்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும். குறிப்பாக உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலும்

11

### தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டம்

## மகாஜனக் கல்லூரியின் 2 அணிகளும் சம்பியன்

கொழும்பு, ஒக். 15
பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சம்பியன்களாகியுள்ளன.

10

### தேர்தல் செலவு அறிக்கையை

## அரியநேந்திரன் சமர்ப்பிக்கவில்லை

கொழும்பு, ஒக். 15
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகளை 3 வேட்பாளர்கள் சமர்ப்பிக்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட அரியநேந்திரனும் உள்ளடங்கியுள்ளார்.

11

## அதானி ஒப்பந்தம் மீள்பரிசீலனையில்

கொழும்பு, ஒக். 15
மன்னார், விடத்தல்தீவு பகுதியில் இந்தியாவின் அதானி நிறுவனத்தால் காற்றாலை மின் நிலையத்தை உருவாக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்

11

## தேர்தல் செலவு தீர்மானிப்பு இன்று

கொழும்பு, ஒக். 15
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்கு

11

## புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படாது

### பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15
ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லை எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்றுத் தெரி

11

## வெள்ளப்பேரிடர் தணிப்பு நிரந்தர நடவடிக்கை தேவை

### ஜனாதிபதி அநுர பணிப்பு

கொழும்பு, ஒக். 15
இவ்வருடம் இரண்டு தடவைகள் வெள்ள இடர் ஏற்பட்டதாகவும், அதற்கமைவாக அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்குச் சரியான மற்றும் நிலை

11

## 'யாழ்கோ' பால் தொழிற்சாலை நீதிமன்றத்தால் சீல் வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
திருநெல்வேலி 'யாழ்கோ' பால் தொழிற்சாலை சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு அமைவாக 70 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், சீல் வைத்து

11






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிவாரணங்களை அதிகரிக்க நாணயநிதியம் இணக்கம்!

## அனில் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15
இலங்கையில் மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் பொருளாதார நிவாரணங்களை மேலும் அதிகரிப்பதற்கு சர்வதேச நாணயநிதியம் இணங்கியுள்ளது என ஜனாதிபதியின் பொருளாதார மற்றும் நிதி ஆலோசகர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பான யோசனைகளை விரைவில் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்போம். மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவிகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவே தற்போதைய அரசு கவனம் செலுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# தமிழரசுக் கட்சிமீது வெறுப்பு இல்லை!

## சட்டத்தரணி டினேசன் தெரிவிப்பு

மன்னார், ஒக்.15
தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சியில் உள்ள சிலரின் தன்னிச்சையான செயற்பாடுகளால் கட்சி மீது மக்கள் அதிருப்தி மட்டுமே அடைந்துள்ளனர் என தமிழரசுக் கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.
தமிழரசுக் கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்திக்கும் போது பல குற்றச்சாட்டுகளை மக்கள் முன்வைத்தனர்.
எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதவகையில் நாங்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-56)



# மதுபானசாலை அனுமதிப்பத்திர பட்டியலை வெளியிடவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சரவணபவன்

மதுபானசாலைக்கான அனுமதி பெற்றவர்கள் எவரும் எமது அணியில் இல்லை. மதுபானசாலை அனுமதி பெறவர்களின் விவரங்களை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வெளியிடவேண்டும்.
- இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார். சனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சை யாக போட்டியிடும் வேட்பாளர் ஈ.சரவணபவன் நேற்று சனநாயகக் தமிழரசுக் கூட்டமைப்பு அலுவலகத்தில் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மக்கள் பக்கம் இருப்பதாகக் கூறும் அநுர குமார திஸாநாயக்க இன்னமும் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை பெற்றவர்களின் விவரங்களை வெளியிடாமல் வைத்துள்ளார். தேர்தலுக்குப்பின்னர்தான் இந்தப் பட்டியல் வெளிவருமோ தெரியவில்லை.
தேர்தலுக்குப் பின்னர் அவற்றை வெளியிடுவதால் எந்தவித நன்மைகளும் இருக்கப் போவதில்லை. தெற்கில் மட்டுமல்லாது வடக்கு - கிழக்கு என எங்கும் ஊழலற்ற ஆட்சியை நிறுவுவதாக இருந்தால் உண்மையை வெளியிட வேண்டும் - என்றார். (எ-125)

# புதிய அரசாங்கத்திலும் பழைய அரசியல் கலாசாரம்

## நுவன் போபகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.15
புனர்வாழ்வுப் பகுப்பாய்வுப் பிரிவின் புதிய பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளமையானது பழைய அரசியல் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றது என்று மக்கள் போராட்டக் கூட்டணியைச் சேர்ந்த நுவன் போபகே தெரிவித்துள்ளார்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஷானி அபேசேகர தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக மேடையேறி இருந்தார். ஓய்வுபெற்ற அதிகாரியான அவருக்குத் தற்போது உயர் பதவியொன்று வழங்கப்பட்டுள்ளது.
தங்களுக்கு நெருக்கமானவர்களுக்குப் பதவிகளை வழங்குவதையே கடந்த அரசாங்கங்களும் செய்துவந்தன. தேசிய மக்கள் சக்தியும் தற்போது அதையே செய்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# காணி வழங்கினால் அநுரவுக்கு ஆதரவு!

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மலையக மக்களுக்கு பத்து பேர்ச் காணி வழங்க நடவடிக்கை எடுத்தால் அவருக்கு ஆதரவு வழங்குவோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித்தலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.
மலையகத்தின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் குறைந்துள்ளனர். அதனால் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் உரிமைகளுக்கும் குரல் எழுப்ப முடியாதுள்ளது. மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை முதல் அனைத்து அடிப்படைப் பிரச்சினை களுக்குப் போராடக் கூடிய ஒரு கட்சி தமிழ் முற்போக்குக் கூட்டணி மாத்திரமே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சிறிது காலத்தில் மக்கள் ரணிலைத் தேடுவார்களாம்

## ராஜித நம்பிக்கை

கொழும்பு, ஒக்.15
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. விரைவில் மக்கள் மீண்டும் ரணிலைக் கேட்பார்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைமை கடும் அதிருப்தியில் உள்ளது. திசைகாட்டியிலும் நெருக்கடிகள் உள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இந்த நெருக்கடி முடிவுக்கு வரும். இந்த அரசாங்கத்தால் சலிப்படைந்த மக்கள் மீண்டும் ரணிலைக் கேட்பார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அரசியலில் இருந்து ஒதுங்கத் தீர்மானம்



கொழும்பு, ஒக்.15
அரசியலில் இருந்து சிறிது காலம் ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கண்டியில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்தச் சந்திப்பில் மாகாணசபை மற்றும் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-இ)



சிறுவர்களுக்கான ஏடுதொடங்கும் நிகழ்வு அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் விஜயதசமி தினமான கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ச-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை பாதிப்பு ஒரு லட்சத்தைத்தாண்டியது

## மூவர் உயிரிழப்பு, இருவர் காயம்

**கொழும்பு, ஒக்.15**

**நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. சீரற்ற கால நிலையால் 12 மாவட்டங்களில் உள்ள 69 பிரதேச செயலகங்களில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

சீரற்ற காலநிலை காரணமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 34 ஆயிரத்து 492 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 484 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் சீரற்ற காலநிலை காரணமாக 240 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. 1753 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 963 பேர் தற்போது 81 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடும் மழை காரணமாக களு, களனி, கிங் கங்கைகள் மற்றும் அத்தனகலு ஓயாவின் 5 இடங்களிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## மழை தொடரும்

கொழும்பு, ஒக்.15

நாட்டைச் சூழவுள்ள வளிமண்டலத்தின் கொந்தளிப்பான தன்மை காரணமாக, தற்போதைய மழை நிலைமை தொடரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கு, மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

## விடுமுறை தினத்திலும் இனி பருவகாலச் சீட்டு

கொழும்பு, ஒக்.15

சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் மாணவர்கள் பருவகாலச்சீட்டைப் பயன்படுத்தி பிரயாணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் வார இறுதி நாள்களில் பிரயாணம் செய்யும் போது பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக மாணவர்கள் தரப்பிலிருந்து கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-25,6)



## அர்ஜுன அலோசியஸுக்கு ஆறு மாத சிறை விதிப்பு

கொழும்பு, ஒக்.15

வற் வரி ஏய்ப்புத் தொடர்பில் டபிள்யூ.எம்.மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன அலோசியஸ் உட்பட மூவருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் 6 மாத கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய 3.5 பில்லியன் ரூபா வற் வரியை ஏய்ப்புச் செய்தமை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ-இ)

## மீட்புப் பணிகளில் கடற்படைக் குழுக்கள்

கம்பஹா, கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இடர் முகாமைத்துவ நிலையத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்காக இலங்கைக் கடற்படையின் எட்டு வெள்ள நிவாரணக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் மழை காரணமாக களுகங்கை, களனி கங்கை, அத்தனகலு ஓயா மற்றும் தெதுரு ஓயா ஆகிய ஆறுகள் நிரம்பி வழிவதால் கம்பஹா, கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடுவெல, மாபிம, நவகமுவ, இஹலகம, ஜாஎல மற்றும் நாத்தாண்டிய ஆகிய இடங்களில் கடற்படை வெள்ள நிவாரணக் குழுக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்காதோர் மீது நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி பணிப்பு

உத்தியோகபூர்வ இல்லங்களை இன்னமும் மீள வழங்காத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுவரையில் உத்தியோபூர்வ இல்லங்களை மீள வழங்காத அமைச்சர்களுக்கு மீண்டும் இது தொடர்பில் நினைவூட்ட அவசியமான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார். 31 முன்னாள் அமைச்சர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்தியிருந்த போதிலும் கடந்த 9ஆம் திகதி வரையில் அதில் 20 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைப்பதை அரசியல் பழிவாங்கலாக எடுத்துக் கொள்ளக்கூடாது எனவும் அமைச்சுப் பதவிகள் இரத்துச் செய்யப்பட்டதுடன் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைப்பது கட்டாயம் எனவும் அரசாங்க அதிகாரிகளுக்கு பிரதமர் விளக்கமளித்துள்ளார். (எ-இ)

## தினம் தெரியுமோ?

கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான மாதிரி, எலக் சனில வோட் பண்ணுற ஆக்களின்ர எண்ணிக்கை வரவரக் குறைஞ்சுகொண்டே வருகுது. இப்பிடி வாக்களிப்பு வீதம் குறையிறதுக்கு கனக்கக் காரணங்கள் இருக்குது. கட்சியளில நம்பிக்கை இல்லாமல் போறது, சனத்தின்ர அலட்சியம், நாட்டு நடப்பு எண்டு சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் சில இடங்களில தேர்தல் திணைக்களத்தின்ர பிழையான முடிவுகளாலையும் இப்பிடி வாக்களிப்பு வீதம் குறையுதாம். அப்பிடி என்ன பிழையான முடிவுகளை எடுத்திருப்பினம்? வேற ஒண்டுமில்லை, உந்த வாக்களிப்பு நிலையங்களை எங்கையெங்க வைக்க வேணும் எண்ட முடிவுதான்.

யாழ்ப்பாணத்தில இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில சில வாக்களிப்பு நிலையங்களை கோயில்களில வைச்சிருக்கினம். சில இடங்களில கோயில் வீதிக்குள்ள இருக்கிற மண்டபங்களிலையும் இப்பிடி வாக்களிப்பு நிலையங்களை அமைச்சதால, செத்த வீட்டு துடக்குள்ளவை, மாதவிடாய்க்கால பொம்பிளையள் எண்டு கொஞ்சப் பேர் வாக்களிக்கப் போகாமல் விட்டிட்டினம். கோயிலில வாக்களிப்பு நிலையத்தை வைச்சால், இப்பிடி சிலர் வாக்களிக்க மனமிருந்தும் போகமாட்டினம் எண்டது தேர்தல் திணைக்களத்தின்ர ஹெட் ஒப்பீஸில இருக்கிறவைக்கு வேணுமெண்டால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் இஞ்ச யாழ்ப்பாணத்தில இருக்கிறவைக்கு எங்கட சனத்தின்ர நடைமுறையள் தெரியும் தானே. அப்பிடித் தெரிஞ்சும் கோயில், குளங்களில எதுக்காக இப்பிடி வாக்களிப்பு நிலையங்களை வைக்கவேணும்?

எல்லாரும் வாக்களிக்கப் போகவேணும் எண்டு காசைக்கொட்டி, ஆக்களைக் கூப்பிட்டு விழிப்புணர்வுக் கூட்டங்களை வைச்சால் மட்டும் காணாது. முதல்ல எல்லாச் சனமும் வந்து போற பள்ளிக்கூடம், வாசிகசாலை மாதிரியான பொது இடங்களை வாக்களிப்பு நிலையங்களாப் போடவேணும். அதைவிட்டிட்டு கோயில்களில இப்பிடி வாக்களிப்பு நிலையங்களை அமைச்சு, தேர்தல் திணைக்களமே வாக்களிப்பு வீதம் குறையிறதுக்கு காரணமா இருக்கக்கூடாது. நடந்தது நடந்திட்டுது. பார்லிமென்ட் எலக்சனிலையாவது உப்பிடியான இடங்களை விட்டிட்டு அதுகளுக்குப் பக்கத்தில இருக்கிற வேற பொது இடங்களை வாக்களிப்பு நிலையங்களாக்குவினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.15

வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த கலைநிலம் இதழ் - 5 மலர் வெளியீட்டு விழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலிகாமம் தெற்கு கலாசாரப் பேரவைத் தலைவர் பா.ஜெயகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச்செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக வாழ்நாள் பேராசியர் வல்லிபுரம் மகேஸ்வரன், கௌரவ விருந்தினராக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25)



# மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், ஒக்.15

கோப்பாய் மத்தி கண்ணகை அம்மன் ஆலய வளாகத்திலும், குளக்கரையிலும் 100 மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடப்பட்டன.

இந்த நிகழ்வில் கோப்பாய் சுகாதார மருத்துவ அலுவலர் கலாநிதி எல். எஜ்.டபிள்யூ டிவஸ் சுரண்ட பிரதம விருந்தினராகவும், யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் சு.ராகவேந்திரன், கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர், இளைஞர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.கோப்பாய் வடக்கு சிறீ சபாபதி நாவலர் விளையாட்டுக் கழகம், நாவலர் சனசமூக நிலையம், கோப்பாய் வடக்கு இளைஞர் கழகம் மற்றும் கோப்பாய் சுகாதார மருத்துவ பிரிவுக்குட்பட்ட இளைஞர்களுக்கான சுகாதார சேவைகள் அமைப்பு போன்றன இணைந்து மர நடுகை செய்துள்ளன. (எ-ரி-20)

# விழிப்புணர்வுப் பேரணி

கிளிநொச்சி, ஒக்.15

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மார்பகப் புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு நடை பவனி நேற்றுத் திங்கட்கிழமை தருமபுரம் மருத்துவமனையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு கண்டாவளைப் பிரதேச செயலகம் வரை நடைபெற்றது. பிராந்திய தொற்று நோய் மருத்துவர் க.றஞ்சன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மருத்துவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், தாதியர்கள், கண்டாவளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், கண்டாளை பாடசாலை மாணவர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். (எ-25-113)



# கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.15

'பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களும் மாற்றத்துக்கான மக்களின் அவாவும்' எனும் தலைப்பில் கருத்தமர்வு கே.கே.எஸ். வீதி கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கருத்தமர்வில் சொ.சிவபாலன் தொடக்க உரை ஆற்றுவதுடன், கலாநிதி அகிலன் கதிர்காமர் கருத்துரை ஆற்றவுள்ளார். கருத்தமர்வில் கருத்துரையை தொடர்ந்து சபையோரின் கருத்துகளுடன் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (எ-ரி-100)

# துப்பாக்கிச் சூடு நடத்தி மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஒக்.15

மரக்கடத்தலில் ஈடுபட்டவர்களை வழிமறித்தபோது, பொலிஸாரை மோதித்தள்ளி தப்பிச் செல்ல முயன்றதை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்திச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வவுனியா, ஓமந்தையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஓமந்தையில் இருந்து மறவன்குளம் நோக்கி கடத்தப்பட்ட மரக்குற்றிகளுடனான வாகனம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது. பொலிஸாரை மோதி விட்டு வாகனம் தப்பிச் செல்ல முற்பட்ட போது துப்பாக்கிச் சூடு நடத்தி வாகனத்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வாகனத்தில் இருந்து மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-25,18)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். சிலருக்கு திடீர் பயணத்தின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். அலுவலகத் தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோச னையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## நெம்புகோல்களான வெள்ளைப்பிரம்புகள்!

இன்று சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம். உலகில் ஒவ்வொரு மனிதனும் அங்கக் குறைபாடுகள் இன்றியும், தேகாரோக்கியமாகவும் வாழவே விரும்புகிறான். இயற்கையிலேயே சிலர் அங்கவீனக் குறைபாடுகளுடன் பிறக்கின்றனர். ஆனால் அவர்களை மனிதன் என்ற வகையில் குறைவான நிலையில் மதிப்பிடுவது மிகத் தவறாகும். அங்கக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்படவேண்டும் என்பதே மனிதாபிமான நிலை. இதை சாத்தியப்படுத்துவதற்காக கண்டறியப்பட்ட அற்புதப் படைப்பே வெள்ளைப்பிரம்பு எனும் 'நெம்புகோல்'.

1931ஆம் ஆண்டு அமெரிக்காவின் இலினோய் மாகாணத்தில் வெள்ளைப்பிரம்பு தினம் முதன் முதலில் கொண்டாடப்பட்டது. 1969ஆம் ஆண்டு அதற்கு இலங்கை அங்கீகாரம் கொடுத்தது. இடைப்பட்ட இந்த 55 ஆண்டுகளில் வெள்ளைப் பிரம்பு இலங்கையில் ஏற்படுத்திய தாக்கமோ மிகப்பெரியது கனதியனாது. 'கண்பார்வை அல்லாதவர்கள் குருடர்கள் அல்லர்', கட்புலத் தெளிவுள்ளோர் 'பார்வையாளர்களும்' அல்லர் என்ற சித்தாந்தத்தை வெள்ளைப் பிரம்புகள் இன்று ஆழமாக விதைத்துள்ளன. அரசியல், பொருளாதாரம், அறிவியல் என அத்தனை துறைகளிலும் வெள்ளைப் பிரம்புகள் இன்று ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் மிகையானது.

இலங்கையின் பொருளாதாரம் இன்று இவ்வளவு இழிநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என்றால், அதற்குப் பிரதான காரணம், 'பார்வையுள்ள குருடர்களான' எங்களின் செயற்பாடுகள்தான். ஊழல் பேர்வழிகள் என்று தெரிந்தவர்களை மீண்டும் மீண்டும் அரியணையில் அமர்த்தியிருக்கின்றோம், பொருளாதாரப் பெருநெருக்கடியை ஏற்படுத்தும் என்று தெரிந்த விடயங்களை எந்தத் திராணியுமில்லாமல் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம், கண்பார்வை வரமாக வாய்க்கப்பெற்றும் அதைப் பயன்படுத்தத் தெரியாமல் குருடர்களாக வாழ்ந்திருக்கின்றோம். எம்மைப்போன்றுள்ளோரின் எண்ணிக்கை இன்று பல கோடிகள். ஆனால், இத்தனை கண்ணுள்ள 'குருடர்களுக்கும்' மத்தியில் வெள்ளைப்பிரம்பைக் கையிலேந்திச் சாதித்த 'பார்வையாளர்களும்' இன்று ஏராளம். ஆதலால்தான் வெள்ளைப் பிரம்புகள் இன்று வெறும் ஊன்றுதடிகளாக அல்லாமல், நெம்புகோல்களாகவும், நம்பிக்கைக் கருவிகளாகவும் மாற்றம் பெற்றிருக்கின்றன என்ற சொல்லை இங்கு அழுத்திப் பதிவுசெய்ய வேண்டியது அவசியமாகின்றது.

பார்வையற்றவர்களுக்கு அனுதாபம் என்பது இன்று அவசியமற்றது. ஆனால் ஏனைய மக்களுடன் சமமாக சமூகத்தில் வாழ்வதற்கான உரிமை அவசியமா கும். இதன் விளைவாகவே பார்வையற்றோருக்காக வெள்ளைப் பிரம்பு தினம் ஏற்படுத்தப்பட்டது. என்ன காரணத்துக்காக வெள்ளைப் பிரம்புகள் கண்டறியப்பட்டனவோ, என்ன காரணத்துக்காக அவற்றுக்கு ஓர் உலகளாவிய தினம் ஏற்படுத்தப் பட்டதோ அதை கட்புலன் இழந்தவர்கள் இன்று கண்டடைந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் மட்டில் எமக்குப் பெரும் கடமையொன்று மிச்சமுள்ளது. அது அங்கீகரித்தலும் 'ஏற்றுக் கொள்ளலும்' வாய்ப் பளித்தலுமாகும். வெள்ளைப் பிரம்புகள் எனப்படு பவை நம்பிக்கையின் வடிவம், சாதனையின் நெம்புகோல், வாழ்வின் ஒளிக்கீற்று. இதன் உண்மைத் தன்மையை உணர்ந்து சாதாரண மானவர்களுக்கு நிகரான வாய்ப்புகளை அவர்களுக்கும் வழங்கும் போது இந்தச் சமூகம் இன்னும் வாழும் வளம்பெறும்.



# வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் இல்லை

**கொழும்பு, ஒக்.15**
**2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இம்முறை நவம்பர் மாதம் முன்வைக்கப்படமாட்டாது எனத் தெரியவருகின்றது.**

நவம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே உரிய காலப்பகுதிக்குள் பாதீட்டை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், நான்கு மாதங்களுக்குரிய செலவுகளை ஈடுசெய்வதற்குரிய இடைக்கால கணக்கறிக்கையொன்று முன்வைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்று, நவம்பர் 21 ஆம் திகதி புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும். புதிய அமைச்சரவை நியமனம், திணைக்கள ஒதுக்கீடு உள்ளிட்ட பணிகள் முழுமைபெற நவம்பர் மாதம் இறுதியாகும். அதன்பின்னரே முழுமையான வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது. மார்ச் மாதமளவில் பாதீடு முன்வைக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (எ-44)

## மதுபானசாலைக்கு மக்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு முன்பாக வலிகாமம் வடக்கு சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (எ-20,66)

## தேர்தலின் பின்னரே நிறுவன மறுசீரமைப்பு

கொழும்பு, ஒக்.15

நட்டத்தில் இயங்கும் அனைத்து அரச நிறுவனங்களையும் மறுசீரமைப்புச் செய்வது தொடர்பில் பொதுத்தேர்தலின் பின்னரே அரசாங்கம் தீர்மானிக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் உட்பட நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது மற்றும் மத்தல விமான நிலையத்தை வேறு நிர்வாகத்திடம் கையளிப்பது போன்ற முடிவுகளை பொதுத் தேர்தலின் பின்னரே அரசாங்கம் எடுக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வெடி விபத்தில் 19 பேர் காயம்

கொழும்பு, ஒக்.15

கம்பஹா, படல்கமப் பகுதியில் உள்ள கார்பன் தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்ற வெடி விபத்தில் 19 தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர் என்றும், ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொதிகலன் அதிக வெப்பம் காரணமாக வெடித்து சிதறியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-இ)

## சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்ட ஜீப்

கொழும்பு, ஒக்.15

போக்குவரத்து அமைச்சுக்குச் சொந்தமான ஜீப் ஒன்று சிதைவடைந்த நிலையில் நுவரெலியாவில் மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவர், தான் அமைச்சராகப் பதவி வகித்தபோது இந்த ஜீப் வாகனத்தை தமது இணைப்பதிகாரி ஒருவருக்கு வழங்கியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

மீட்கப்பட்ட ஜீப் வாகனம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## நாளை

16.10.2024

புதன்கிழமை - புரட்டாதி - 30

சுபநேரம் : 04.32- 06.02

ராகுகாலம் : 12.02 - 01.32

## நாளொரு நல்வார்த்தை

**உண்மை எப்போதும் சுருக்கமாய் பேசப்படுகிறது;**
**பொய்தான் எப்போதும் விரிவாகப் பேசப்படும்.**

- லியோ டால்ஸ்டாய் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று முதல்

# முச்சக்கரவண்டிக் கட்டணம் கிளிநொச்சியில் குறைப்பு




கிளிநொச்சி, ஒக்.15

இன்று செவ்வாய்க்கிழமை முதல் முச்சக்கரவண்டிகளின் கட்டணங்களைக் குறைக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப கட்டணமாக 200 ரூபாவாகவும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100ரூபாவாகப் பெறப்பட்ட நிலையில் புதிய அரசாங்கத்தின் பெற்றோல் விலைகுறைப்பு காரணமாக ஆரம்ப கட்டணமாக 150ரூபாவும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100ரூபாவும் காத்திருப்புக் கட்டணமாக நிமிடத்துக்கு ஐந்து ரூபாவாகவும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ஆரம்ப கட்டணம் நூறுரூபாவாக இருந்தாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிகள் சீரின்மையால் இந்தக் கட்டணத்தை அறவிட்டோம்.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டமும் அபிவிருத்தி அடையும் நிலையில் கொழும்புக்கு நிகரான கட்டணத்தைக் கொண்டுவரமுடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-113)





யாழ்.மாவட்ட மட்டத் தமிழ்மொழி மூலமான தேசிய கலை இலக்கியப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. போட்டியில் பல மாணவர்கள் பங்குபற்றினர். (ச-66)



விஜயதசமி நன்னாளான கடந்த சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமிக் கந்தன் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்துக்கு எழுந்தருளி வருகை தந்தார். இதன்போது நீண்டகாலப் பாரம்பரியம் மிக்க வியாக்கிராசுரவதம் எனும் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் நடத்திய சிறப்புத் தவில் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெற்றது. (ச-66)

# குடிதண்ணீர்த் திட்டம் அக்கராயனில் தடங்கல்

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சி - அக்கராயன் குடிதண்ணீர்த் திட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலத் தொகுதி கடந்த ஒருவருட காலத்துக்கும் மேலாகப் பழுதடைந்துள்ளமையால் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் 700 வரையான குடும்பங்கள் உள்ள நிலையில் இந்த குடிநீர்த்திட்டத்தின் மூலம் 250 குடும்பங்கள் வரை நன்மை பெற்று வந்துள்ளனர்.

இந்தநிலையில் அது பழுதடைந்த நிலையில் அதனைத் திருத்தம் செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே குடிதண்ணீர் வழங்கலுடன் தொடர்புடைய அதிகாரிகள் குடிதண்ணீர் விநியோகத்தை சீர்செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-22,13)



# பேச்சியம்பாளுக்கு மானம்பூ உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.15

அராலி மேற்கு நீளத்திக்காடு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தில், நவராத்திரி விரதத்தின் இறுதி நாளான மானம்பூ உற்சவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ பேச்சியம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதனைத் தொடர்ந்து வாழை வெட்டு நடைபெற்றது. (ச- 27)

# தென்மராட்சி லவ்லி கிண்ண துடுப்பாட்டத் தொடர் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.15

தென்மராட்சி லவ்லி கிண்ணம் - 2024 மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி மைதானத்தில் ஆரம்பமானது. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில், பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணியும் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் தலைவருமான கே.வி.தவராசா கலந்து கொண்டார். (ச-27)








# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக்.15

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. குருதிக்கொடை முகாம் நிகழ்வை நல்லூர்ப் பிரதேசசபையின் செயலாளர் யு.ஜெலீபன் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30 • 01 • 1971

இறப்பு 27 • 09 • 2023

**அமரர் கனகரத்தினம் சுபாஸ்கரன்**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

இல. 54, கண்ணாபுரம்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(CS/56453) J-1

துயருறுவோர்
**குடும்பத்தினர்**

---

**மணமகள் தேவை**

யாழ் இந்து 1989 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் பாவநிலை 5 Ph.D in Doctor China University மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**076 899 5179, 077 466 0914**

---

## வெள்ளைப்பிரம்பு தினம்


யாழ்ப்பாணம், ஒக்.15

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமான இன்று செவ்வாய்கிழமை வெள்ளைப்பிரம்பு தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தி பார்வையற்றோர் வாழ்வுக்கு உதவுமாறு கருவி நிறுவனத்தினர் கோரியுள்ளனர்.

வெள்ளைப்பிரம்பு என்பது பார்வையற்றவர்களின் ஓர் அடையாளச்சின்னமாகும். அது பொது மக்களை விழிப்பூட்டி பார்வையற்றவர்களின் நடமாடுதலை வளப்படுத்துகின்றது. எனவே வெள்ளைப்பிரம்புடன் ஒருவரைக் காணுமிடத்து அவருக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவருடைய பயணத்தை ஆரோக்கியப்படுத்துமாறு கருவி நிறுவனத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ-25)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25 • 11 • 1960

மறைவு 15 • 09 • 2024

**அமரர் இராசரத்தினம் ஆனந்தகுமாரசாமி (ஜெயா)**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிசம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"மலரகம்"
கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(CS/56300) J-1

உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**
077 678 6952

---

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை தங்கவடிவேல்

**(முன்னாள் வேல்மோட்டோஸ் உரிமையாளர் ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்)**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கவடிவேல் அவர்கள் நேற்று (14.10.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற செல்லையா எள்ளுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா தங்கவடிவேல் அவர்களின் அன்புக் கணவனும், மகாதேவனின் அன்புச் சகோதரனும், ரஞ்சனி, ரவீந்திரன், ரவிச்சந்திரன், விஜயமாலா, விஜயஸ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், சுமங்கலி, நிரஞ்சனா, உமாமகேஸ்வரன், திவாகரன் ஆகியோரின் அன்பு மாமாவும், நிதுசன், அபிநயா, விதுஷன், பிரனீட்டா, யதூஷன், சங்கீர்த், சயமிக்கா, கவின், தீபிகா, பிரதீப், சஞ்ஜீவ், சயன், சஞ்ஜே, ஷாகான், அபிநயா, ராகவேந்தன், சலோமி, மிரோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், அஜேஷின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணி அளவில் அவரின் ஏழாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் :**
**குடும்பத்தினர்**
076 651 9464
070 444 4351

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(CR/43414) J-1

---

# 6வது ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 22 • 05 • 1945

மறைவு 23 • 09 • 2018

**அமரர் சின்னையா நடராஜலிங்கம்**

**(ஓய்வுநிலை மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)**

ஆறு ஆண்டுகள் ஆனாலும் அழியவில்லை எம் சோகம்
வாழ்க்கை என்ற வசந்த காலம் வரும் போதே எம்மை விட்டு
கணப்பொழுதில் சென்றது ஏன் அப்பா?
கலைந்து செல்லும் மேகமென காலங்கள் கடந்து போகின்றனவே
அனாலும் உம் நினைவுகள்
எம் இதயமதில் ரணமாய் வலிக்கின்றதே.
எம் ஆருயிர் தந்தையே
என்றும் நீர் எமக்கு ஒளி தருவீர்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு.

(CR/43416) J-1

நீங்காத்துயருடன்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்துகள் சேர்ப்பு விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஒக்.15

முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு சொத்து கள் எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, முன்னாள் அமைச்சர்களான அனுபா பாஸ்குவல் மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்பில் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அதுதவிர மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்த்தன மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பிலும் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களின் விசாரணைகள் தொடர்பான விவரங்கள் விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும்

*ஜனாதிபதி அநுர நம்பிக்கை*

கொழும்பு, ஒக்.15

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் இருந்து கிடைத்த ஆதரவைவிடவும் பேராதரவு பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெறும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அந்தவகையில் இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரு தேசிய அமைப்பு மீது நம்பிக்கை வைத்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலும் எமக்கே வெற்றிகிட்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

## கருத்தரங்கும், நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக்.15

கல்வி அபிவிருத்திக்குழுமம் நடத்திய முன்பள்ளித்துறைசார் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், 21 ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச்செல்நெறிகள் நூல்வெளியீடும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி அபிவிருத்தி குழுமத் தலைவர் ம. சூரியசேகரம் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், விருந்தினராக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 'முன்பள்ளித்துறை மேம்பாட்டில் பல்கலைக்கழகங்களின் பங்கு' எனும் தொனிப்பொருளில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.அற்புதராஜா, 'வடமாகாணத்தில் முன்பள்ளித்துறைக் கட்டமைப்பும் கல்வித் திணைக்களம் கொண்டிருக்கும் வகிபாகமும்' எனும் தலைப்பில் வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பபிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் த.முகுந்தன், 'முன்பள்ளி போஷாக்கு மற்றும் சுகாதார மேம்பாட்டின் அவசியம்' தொடர்பில் மருத்துவக் கலாநிதி பரா.நந்தகுமார், 'வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர் தேவைகள்' குறித்து முன்பள்ளி ஆசிரியர் சங்கம் பருத்தித்துறைக் கோட்டத் தலைவர் ச.பத்மலோஜினி, 'முன்பள்ளி தொடர்பான தொழில் திணைக்களச் சட்டங்கள்' தொடர்பில் வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் சி.சிவரஞ்சினி, 'முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவமும் முன்பள்ளித்துறை மேம்பாட்டில் தார்மீக மற்றும் கூட்டுப்பொறுப்புடையவர்களும்' எனும் தலைப்பில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். 21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச்செல்நெறிகள் எனும் நூலை வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் வெளியிட்டு வைத்ததுடன், முதற் பிரதியை மாகாண கல்விப்பணிப்பாளர் க.பிரட்லி ஜெனர் பெற்றுக்கொண்டதுடன், தொடர்ந்து நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-19)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

மன்னார், ஒக்.15

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வடமாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்திய 150 மணித்தியால சிங்கள பயிற்சிநெறியை பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வு சிரேஷ்ட மொழிப்பாட தேசிய வளவாளர் இ.சாகரிகா பிகிறாடோ தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட அதிபர் மன்.முருங்கன், மத்திய கல்லூரி தொம்மை இருதயராசா குரூஸ், மன்னார் மாவட்ட கிராம அலுவலர் பிரிவின் தலைமை உத்தியோகத்தர், பொதுச் சுகாதார உத்தியோகத்தர், இரண்டாம் மொழி பாட வளவாளர் சுபாஜினி விநாயகமூர்த்தி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு இணைப்பாளர் சிந்துஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் புதிய சிங்களக் கற்கைநெறி எதிர்வரும் மாதம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் பயிற்சிநெறியைத் தொடர விரும்புவோர் 0776355521என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)



## அரசியல்வாதிகளால் நீர்க்கட்டண நிலுவை 9 மில்லியன் ரூபா

கொழும்பு, ஒக்.15

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 41 பேர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நீர்க்கட்டணங்களை இன்னும் செலுத்தவில்லை என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அறவிடப்படாது நிலுவையில் உள்ள தொகை 9 மில்லியன் ரூபாவாகும்.

பொதுவிதிகளுக்கு அமைய குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

# தமிழர் திசைகாட்டி தமிழரசுக் கட்சியே

*சுமந்திரன் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம்,ஒக். 15

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் திசைகாட்டி எமது கைகளிலேயே உள்ளது என்று தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.வடமராட்சிக் கிளை அலுவலகம் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரித்தது. அதன்படி மக்கள் வாக்களித்து வடக்கு - கிழக்கில் முதல் நிலையில் கொண்டு வந்தனர். கட்சியை மக்கள் ஆதரித்து வாக்களித்தனர். அதற்கமைய வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் திசைகாட்டி எமது கைகளிலேயே உள்ளது - என்றார். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய மட்டக் கபடிப்போட்டி கோணாவில் ம.வி. சம்பியன்

**கிளிநொச்சி, ஒக். 15**

**தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தையும், பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டது.**

ஆண்களுக்கான இந்தக் கபடிப் போட்டி கேகாலையில் நடைபெற்றது. இதில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது. (ச)

## ஆசிரியர்கள் சேட்டை; நடவடிக்கை இல்லை

*பெற்றோர் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவிகளுடன் முறையற்ற நடத்தையில் இரண்டு ஆசிரியர்கள் ஈடுபடுகிறார்களெனவும் அவர்கள் மீது பாடசாலைச் சமூகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பெற்றோரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்கள், பெண் பிள்ளைகளை பாடசாலையின் தனிப்பட்ட அறையில் அழைத்து விசாரிப்பது, முறையற்ற நடத்தையில் ஈடுபடுவதுடன் இடுப்பை பிடித்து நடனம் ஆடுகின்ற முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். இதனால் குறித்த பிள்ளைகள் மனஉளைச்சலை சந்திப்பதுடன் பாடசாலைக்குச் செல்லவும் மறுக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரூடாக அதிபருக்குத் தெரியப்படுத்தினோம். ஆயினும் அதிபரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே குறித்த ஆசிரியர்களை இடைநிறுத்தி விசாரணை மேற்கொண்டு உரிய தண்டனைகளை வழங்குவதுடன் இடமாற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ச-20)

## வடக்கு அரசியலிலும் மாற்றம் வேண்டுமாம்

### சந்திரகுமார் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 15

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் போன்று வடக்கிலும் ஏற்படவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களும் அதன் நன்மைகளை அனுபவிக்கமுடியும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தனது ஆதரவாளர்களுடனான நேற்றைய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

போரின் பின்னர் வடக்கில் தொடர்ச்சியாக அரசியல் அதிகாரங்களில் இருந்து வருகின்றவர்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்யவில்லை. மீள் குடியேற்ற காலத்தில் நான் அதிகாரத்தில் இருந்தபோது மக்களைத் தேடித் தேடிச் செய்த பணிகளில் சிறிதளவேனும் பின்னர் தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்தவர்கள் மேற்கொள்ளவில்லை. வெறுமனே அறிக்கைகளைவிட்டுக்கொண்டும், நாடாளுமன்றத்தில் பேச்சுப்போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் போன்று போட்டி போட்டுக்கொண்டு பேசி தங்களைத் தெரிவு செய்து அனுப்பி மக்களின் பணி முடிந்துவிட்டு காலத்தைக் கடத்தியவர்கள் மீண்டும் மக்களிடம் வாக்குக் கேட்டு வருகின்றனர். வாக்களித்த மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்ற மனச்சாட்சி இன்றி மக்கள் முன் வருகின்றவர்களை மக்கள் இந்தத் தேர்தலில் நிராகரிக்க வேண்டும்.

இந்த 15 ஆண்டுகளில் இவர்கள் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியிலான உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கவில்லை, அபிவிருத்தியையும் பெற்றுக்கொடுக்கவில்லை. இவ்வாறான மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு சாபக்கேடானவர்கள். இவர்களால் மக்களுக்கும் மண்ணுக்கும் எந்த நன்மையும் இல்லை. எனவே மக்கள் இந்த தேர்தலை தென்னிலங்கை போன்ற ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தலாக மாற்றவேண்டும் என்றார். (அ-ஒ-214)


## சைக்கிளில் சென்ற 14 வயதுச் சிறுமி பிரதமருக்கு மனு

காத்தன்குடியைச்சேர்ந்த பாத்திமா நாடா என்ற 14 வயதுச் சிறுமி துவிச்சக்கரவண்டியில் கொழும்பு சென்று பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று நேரில் சந்தித்து மனுவைக் கையளித்துள்ளார்.

சிறுவர்களிடையேயான போதைப்பொருள் பாவனையை நிறுத்துவதற்கும், சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் சிறுமி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 10 . 1942



மறைவு
11 . 10 . 2024

## கந்தையா குமாரசிங்கம்

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ACI Ltd)**

சங்கரத்தை குளத்தடியை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசிங்கம் அவர்கள் கடந்த 11.10.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் பொன்னம்மா, அமரர் மகேஸ்வரன் (இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் காப்பாளர்), திருமதி வீரபத்திரன் சந்தானலட்சுமி (சுவிஸ்), தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற CDOA, நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆதவன் (வருகைதரும் ATI விரிவுரையாளர்), தாரணி (கனடா - Chemist at Regional Environmental Laboratory - Tronto), ஆரணி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சகுணன் (கனடா), லதன் (பொது சுகாதார பரிசோதகர், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓவியா, விவேகன், அற்புதா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் - ஆதவன் - 077 2562 981 (மானிப்பாய்)**
**மகள் - தாரணி - +141 684 17117 (கனடா)**
**மருமகன் - லதன் - 077 340 5973 (மானிப்பாய்)**
**மகள் - ஆரணி - 077 322 6570**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய்.**

(CS 1626) J-1

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் சண்முகநாதன்

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சண்முகநாதன் அவர்கள் கடந்த (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், வேலணை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பழனியப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயபாலலோஜினி (பாலி) அவர்களின் அன்புக் கணவரும், நிரூஜன் (லண்டன்), விதூஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகுத் தந்தையும், தீபிகா, துவாரகா ஆகியோரின் அன்பு மாமனாரும், அத்விகா, அஷ்விகா ஆகியோரின் அன்பு பேரனும், இராஜேஸ்வரி (வவுனியா), சரோஜினிதேவி (கனடா), சாந்தநாயகி (புத்தூர்), கமலாதேவி (வவுனியா), சர்குணநாதன் (புத்தூர்), யோகஇராணி (ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2024) புதன்கிழமை முற்பகல் 11:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.30 மணியளவில் புத்தூர் மேற்கு ஹிந்துப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன்கோவில் வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**சர்குணநாதன் - 077 4456 347**

(CS 43417) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. தேசிய அணியில் இலங்கைத் தமிழன்



இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட நிஷான் வேலுப்பிள்ளை, அவுஸ்திரேலிய உதைபந்தாட்ட அணிக்காக சர்வதேசப் போட்டியில் ஆடியுள்ளார். 2026 உலகக் கிண்ண தகுதிச்சுற்று ஆட்டத்தில் சீனாவுக்கு எதிரான ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுக்காக களமிறங்கிய அவர், கோலொன்றையும் அடித்தார். இந்த ஆட்டத்தில் 31 என அவுஸ்திரேலியா வெற்றியீட்டியது. (அ-ஒ-இ)

# வேட்பாளர் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 15

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அறிமுகம் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சுலக்சனை முதன்மை வேட்பாளராகக் கொண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் களமிளங்கியுள்ளது.

முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த், பிரான்சிஸ் கஜன், றொபேர்ட் ஜெனி, கருப்பையா சேகர், சபாரட்ணம் ரமேஷ், சிற்றம்பலம் கிருபாகரன், நியூட்டன்ரமேஷ்மற்றும் சோமசுந்தரம் ஜூட் கஜேந்திரன் உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர். (அ-ஒ-20)



# ஊழல் மோசடி விசாரணை: சமரசத்துக்கு இடமில்லை

## அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 15

**நாங்கள் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக் கொள்ளமாட்டோம். இலஞ்சம் ஊழல் பற்றிய சாற்றுதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஏற்கனவே ஊழல் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசாங்கம் ஏற்கனவே சில விடயங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நெறிமுறையான நிர்வாகம், ஊழலை ஒழித்தல், அரச சேவையில் வினைத்திறன், சட்டத்தின் ஆட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாசாரத்தை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார். பொருளாதார வெற்றியுடன் இந்த முக்கியமான தூண்கள் இணைந்திருக்க வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம். நாங்கள் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம் - என்றார். (அ-ஒ-இ)

## தமிழரசுக்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆயள் கால உறுப்பினரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான மார்க்கண்டு நடராசா இந்த வழக்கை யாழ். மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கில், முதலாம் எதிரியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசாவும், இரண்டாம் எதிரியாக பதில் பொதுச் செயலர் ப. சத்தியலிங்கமும், மூன்றாம் எதிரியாக சேவியர் குலநாயகமும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.


கடந்த 10ஆம் திகதி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 3 எதிராளிகளும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு கூட்டப்பட்டு முறையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் வரை கட்சியின் நிர்வாகப் பதவி எதனையும் வகிக்கத்தகுதி அற்றவர்கள் என்ற நிரந்தரத் தடையையும், மூன்று எதிராளிகளும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் வெறிதானவையும் என்ற கட்டளையாக்கும் படியும், மத்திய செயற்குழு என்ற பெயரில் கூட்டங்களைக்கூட்டுவதற்கு இடைக்காலத் தடையும் விதிக்குமாறு வழக்காளி நிவாரணங்களாகக் கோரியுள்ளார். (அ-ஒ-27)

## மகாஜனக்...

குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜன பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலநறுவை பெண்டிவெல கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றிபெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் லயன்சிகா, அணித்தலைவி குயின்சி ஆகியோரது கோல்களுடன் 2:0 என மகாஜனா முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் லயன்சிகா, குயின்சி ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜன 4:0 என சம்பியனாகியது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜன பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றி பெற்றது. முதல்பாதி ஆட்டத்தில் அணித்தலைவி உமாசங்கவி, கல்சிகா ஆகியோரது கோல்களுடன் 2:0 என மகாஜன முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் உமாசங்கவி, கியூஸ்ரிகா ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல்களைப்பெற்றுக்கொடுக்க மகாஜன 4:0 என சம்பியனாகியது. (அ-ஒ-இ)





# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை: அநுரவுக்கு 7 நாள் காலக்கெடு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளிப்படுத்தப்படாத இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடன் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவர், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக ஜனாதிபதிக்கு 7 நாட்கள் காலக்கெடு விதித்துள்ள அவர், இக்காலப்பகுதிக்குள் அறிக்கைகள் வெளிவராவிட்டால் அவற்றை தாம் வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுக்களின் எந்தவொரு அறிக்கையும் காணாமல்போகவில்லை என்பதையும், பக்கங்கள்கூட குறைக்கப்படவில்லை என்பதையும் நாம் மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.

உயர்நீதிமன்ற நீதியரசர் சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் ஒரு பகுதி, நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. அதைப் பகிரங்கப்படுத்தவேண்டாம் என ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரையின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தொடர்பான தகவல்கள் இந்தப் பகுதியில்தான் உள்ளன என்று தகவல் பரப்பப்பட்டது. ஆணைக்குழுவால் வெளியிடப்படக்கூடாது என பரிந்துரைக்கப்பட்ட பகுதி, இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கத்தோலிக்க ஆயர்கள் சபைக்கு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

ஓய்வுநிலை நீதியரசர் ஐ.எம். இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஓய்வுநிலை நீதியரசர் ஏ.என். ஜே. சில்வா தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை செப்ரெம்பர் 14 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்விரு அறிக்கைகளையும் உடன் வெளியிடுமாறு நாம் அரசை வலியுறுத்துகின்றோம். கத்தோலிக்க சபையும் இதைத்தான் வலியுறுத்துகின்றது.

இவ்விரு அறிக்கைகளும் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் அறிக்கையை மூன்றாம் தரப்பொன்று வெளியிடுவது சம்பிரதாயபூர்வமான நடவடிக்கை அல்ல. அதனால்தான் நாம் அவற்றை வெளியிடாமல் இருக்கின்றோம்.

எனினும், இவ்விரு அறிக்கைகளையும் அடுத்த 7 நாட்களுக்குள் ஜனாதிபதி வெளியிட நடவடிக்கை எடுக்காவிட்டால், அவற்றை நாம் வெளியிடுவோம் என்ற எச்சரிக்கையை அரசுக்கு விடுக்கின்றோம்- என்றார். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசரமைப்புச்...

'பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐ.நா. சபை பிரதிநிதியால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக இருப்பது குறித்தும் இந்தச் சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பை மட்டுப்படுத்தியிருப்பது நிதித்துறையில் குறிப்பிடத்தக்க சவால்களுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் சுட்டிக்காட்டியது. மேலும், தேசியப் பொருளாதாரத்தில் விவசாயத்துறை குறைந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதும் இதற்கு காரணமாகிறது.

ஆசிய வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விவசாய உற்பத்தித்திறன் மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

'விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டுள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை தமது பிரதான வருமான வழியாக கருதவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, பேரம் பேசும் சக்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியாக உள்ள விவசாய சங்கங்களை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன. நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை. அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண்நிதித்துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக பெண் தொழில்முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர அவரிடம் தெரிவித்தார். புதிய அரசாங்கச் சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் நாடாளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்தச் சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ஒ-இ)

## சிவராம்...

ஒட்டுக்குழுவொன்றால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான படுகொலை தொடர்பிலும் விரைவாக விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாக மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஈ.சரவணபவனின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் 2005ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட சிவராமின் விசாரணைகள் மீண்டும் தூசு தட்டப்பட்டுள்ளன. இது எப்போதோ நடந்து முடிந்திருக்க வேண்டியது. அப்போதைய ஆட்சியாளர்களுடன் இயங்கிய ஒட்டுக்குழு ஒன்றின் மீது இது தொடர்பான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. சிவராம் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒட்டுக்குழுவின் தலைவராகவும் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த ஒருவரினுடையது என்ற சந்தேகங்கள் முன்வைக்கப்பட்டிருந் தன. கடந்த கால அரசாங்கங்கள் ஒட்டுக்குழுக்களைப் பாதுகாப்பதற்காக இந்த விசாரணைகளை கிடப்பில் போட்டிருந்தன.

அநுர அரசாங்கம் இதை மீண்டும் விசாரிக்க கையில் எடுத்தமை வரவேற்புக்குரியது. துணிச்சலான முடிவு. ஆனால், முன்னைய அரசாங்கங்களைப்போன்று பெரும் படம் காட்டி ஆரம்பித்துவிட்டு பின்னர் சப்பென்று அதைக் கைவிடக்கூடாது.

அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் வந்தபோது உதயன் பணிமனைக்கும் வந்திருந்தார். நான் அவரைச் சந்தித்தேன். உதயன் பத்திரிகை மீது இதுவரை 39 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்றுக்குக்கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக உலகிலேயே முதல் தடவையாக ஊடக நிறுவனம் ஒன்றுக்குள் புகுந்து பணியாளர்களை சுட்டுக்கொலை செய்த சம்பவம் அரங்கேறியதும் உதயனில்தான். அதையும் அநுரவுக்கு சுட்டிக்காட்டியிருந்தேன். அந்தச் சம்பவத்துடன் அப்போதைய ஆட்சியில் அமைச்சராக இருந்தவரின் ஒட்டுக்குழு தொடர்புபட்டதாக பலர் பொதுவெளியில் கூறியிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பிலும் உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும். ஒட்டுக்குழுக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இன்று வேஷங்களைப் போடுகின்றார்கள். அவர்களின் உண்மை முகத்தை தமிழ் மக்கள் அறிவதற்கு இது நல்ல வாய்ப்பாக அமையும்.

உதயன் மீதான சம்பவங்களைத்தாண்டி வடக்கு மற்றும் கிழக்கில் பல தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். தாக்குதலுக்கு உள்ளாகினார்கள். இவை தொடர்பிலும் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் - என்றார். (அ-ஒ-125)

## 'யாழ்கோ'...

மூடுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால், கடந்த 8ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, தொழிற்சாலை சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குவது அவதானிக்கப்பட்டது. தொடர்ந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் இனங்காணப்பட்ட சுமார் 30 க்கும் மேற்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கு எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டது.

இந்த அறிவித்தல் பால் தொழிற்சாலையின் தலைவர், முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபையினருக்கு உரிய தெளிவுபடுத்தல்களுடன் வழங்கப்பட்டது. இந் நிலையில் கடந்த 12ஆம் திகதி மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமை அவதானிக்கப்பட்டதை அடுத்து, யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் பால் தொழிற்சாலை முகாமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேலதிக நீதிவான் எஸ். லெனின்குமார், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மன்றில் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தை கருத்தில்கொண்டு தொழிற்சாலையை 'சீல்' வைத்து மூடுமாறு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் 70 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்ததுடன், திருத்த வேலைகள் முடிந்தவுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரை மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தார். இதனையடுத்து பால் தொழிற்சாலை சீல் வைத்து மூடப்பட்டது. (அ-ஒ- 26)

## தேர்தல்...

செலவு செய்யக்கூடிய ஆகக் கூடிய தொகையை நிர்ணயிப்பது தொடர்பில், அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 9.30 மணிக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவில் நடைபெறவுள்ளது. (அ-ஒ-6)

## வெள்ளப்பேரிடர்...

யான வேலைத்திட்டம் அவசியம் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஏற்கனவே கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக பணம் தேவைப்படுமாயின் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அநுரகுமார நிதி அமைச்சின் செயலருக்கு அறிவித்தார்.

இவ்வருடத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேதமடைந்த சொத்துகள் புனரமைக்கப்படாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (அ-ஒ-இ)

## அதானி...

துள்ளதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

காற்றாலை மின் நிலையத்தை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்திய அதானி நிறுவனத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று அழைக்கப்பட்டபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பான மனுக்கள் எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இந்த மனுக்கள் வனவிலங்கு மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புச் சங்கம், சுற்றுச்சூழல் நீதி மையம் உள்ளிட்ட தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மனுக்கள் அழைக்கப்பட்டபோது, அமைச்சரவைச் செயலாளர் மற்றும் எரிசக்தி அமைச்சர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, இந்த மாதம் 7ஆம் திகதி உத்தேச காற்றாலை மின் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன்படி, இலங்கை அரசுக்கும் இந்திய அதானி நிறுவனத்துக்கும் இடையேயான ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் மற்றும் மனுக்களில் உள்ளவற்றைக் கருத்தில் கொண்டு, உரிய திட்டம் குறித்து மறுபரிசீலனை செய்து, அதன் பிறகு முடிவு எடுக்கப்படும் என, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

தற்போதைய இடைக்கால அமைச்சரவையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் இது குறித்து எடுக்கப்படும் தீர்மானத்தை அறிவிப்பதற்காக திகதியை வழங்குமாறு கோரினார்.

அதுவரை திட்டத்தின் தற்போதைய நிலை அப்படியே தொடரும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு வாய்மொழியாக அறிவித்தார்.

இந்த விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்த மனுதாரர்களின் சட்டத்தரணிகள், அந்தந்த மனுக்களில் பிரதிவாதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் உத்தேச அமைச்சரவை உறுப்பினர்களை பிரதிவாதிகளாக நியமித்து மனுவில் திருத்தம் செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்க அவதானிப்புகள் இருப்பின் அவற்றை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளது. (அ-ஒ-இ)

## அரியநேந்திரன்...

பிரதான வேட்பாளர்களாயிருந்த அநுர குமார, சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் இறுதி நாளிலேயே அதனைச் சமர்ப்பித்துள்ளனர். (அ-ஒ-இ)

## புலமைப்பரிசில்...

வித்துள்ளார். சர்ச்சைக்குரிய 3 கேள்விகளுக்கும் புள்ளிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சில வினாக்கள் கசிந்தமையால் பிரச்சினையான சூழ்நிலை உருவானமை குறிப்பிடத் தக்கது. (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலாளிகள் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஒக். 15
வீதியில் பயணித்த ஒருவரை வழிமறித்து தாக்குதல் நடத்தியவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி கஸ்தூரியார் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வீதியில் மறித்த இருவர், தலைக்கவசத்தால் தாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தாக்குதலுக்குள்ளான இளைஞன் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

இதையடுத்து பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், சி.சி.ரி.வி. காணொலியை எடுத்து விசாரணைகளை ஆரம்பித்தனர். சந்தேக நபர்களை இனங்கண்ட பொழுது இருவரும் தப்பித்து ஓடியுள்ளனர். இந்த நிலையில் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கு அமைவாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று இருவரையும் கைது செய்ததோடு, அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் ஓட்டுமடம் மற்றும் தாவடியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-26)



# இலங்கை தேசிய அணியில் மகாஜன வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், ஒக். 15
நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் 30ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய மகளிர் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத் தொடரில் பங்குபற்றும் இலங்கைப் பெண்கள் தேசிய அணியில் யாழ். மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட வீராங்கனைகளான பாஸ்கரன் சானு, சிவநேசன் தர்மிகா, சுரேந்திரன் கௌரி ஆகிய மூவர் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்கள் மூவரும் பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்குத் தலைமை தாங்கியதுடன் பாடசாலைப் பருவத்தில் வயதுப் பிரிவுகளுக்கான தேசிய அணி களிலும் இடம்பிடித்திருந்தனர். (அ-ஒ-66)

# பட்டினிக் குறியீட்டில் இந்தியாவின் நிலை மோசம்

சென்னை, ஒக்.15
நடப்பு ஆண்டுக்கான உலகப் பட்டினிக் குறியீட்டு அறிக்கையில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கையை விடவும் இந்தியா மோசமான நிலைமைக்குச் சென்றுள்ளது.

127 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 2024ஆம் ஆண்டுக்கான பட்டினிக் குறியீட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் இந்தியா 105 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. தீவிரமான பசி, பட்டினிப் பிரச்சினைகள் கொண்ட நாடாக இந்தியா வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைப்பாடு அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. குழந்தையின் வளர்ச்சி குன்றி 35.5 வீதமா கவும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் 2.9 ஆகவும் காணப்படுகின்றது.

அதேவேளை, முன்னர் வெளியாகியிருந்த பட்டினிக் குறியீட்டு அறிக்கைகளை இந்திய மத்திய அரசு நிராகரித்திருந்தது. (எ-இ)


## வாடகைக்குத் தேவை

எமது நிறுவனத்திற்கு 500 சதுர அடி அல்லது அதற்கு மேல் அளவுடைய கட்டடத்தொகுதி வாடகைக்குத் தேவை .
A9 வீதி, K.K.S வீதி, பருத்தித்துறை வீதி போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.
(CS/56458) J-1
077 929 5909, 077 888 7051,011 700 6204



## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ்நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு
**City Tex - Nallur**
அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் - 35000 + Bonos, வயது - 18 - 25 வரை.
வேலை நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை.
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.
(CS/56457) J-1
021 221 6185, 077 293 5537



பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244


# பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 15
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பருத்தித்துறையில் இடம்பெற உள்ளது.

'கலைகளைக் காப்போம் கலையால் வாழ்வோம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி கிராமக்கோட்டுச் சந்திக்கு அருகாமையில் உள்ள எஸ்.எஸ். கொம்ப்ளக்சில் இடம்பெற உள்ளது.

வடமராட்சி பண்பாட்டுப் பெருவிழாவில், விசித்திர விநோத ஊர்திகளின் அணிவகுப்பு, வடமராட்சி மண்ணின் அற்புதக் கலைகள் பண்பாட்டு இசையுடனான பேரணி, கிராமிய இசை, அழகு நடனங்கள், கலைஞர்களுக்கான விருது வழங்கல், மாணவர்களுக்கான பரிசளிப்பு, புராண நாடகங்கள் மற்றும் நூல் வெளியீடு உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

# சீரற்ற காலநிலையால் கடற்றொழில் முடக்கம்;

## மீனவர்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 15
சீரற்ற காலநிலை தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் கடற்றொழில் நடவடிக்கைகள் முடங்கியுள்ளதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாகவே வடமராட்சி உள்ளிட்ட யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துவருகிறது. கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதுடன் அவ்வப்போது பலத்த காற்று வீசி வருகிறது. இவ்வாறு காற்றுடன் மழை பெய்துவரும் நிலையில் கடற்பரப்பு கொந்தளிப்புடன் காணப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கடற்றொழில் நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

# எங்களுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் இணக்கப்பாடு

## டக்ளஸ் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 15
ஜே.வி.பி.யும் ஆயுதபோராட்டம் ஊடாகத்தான் நடாளுமன்றம் சென்றார்கள். ஈ.பி.டி.பி.யும் ஆயுதப்போராட்டம் ஊடாகத்தான் நாடாளுமன்றத்துக்குள் சென்றது. ஜே.வி.பி.யும் இடதுசாரி கொள்கையைத்தான் முன்னெடுக்கின்றது. ஈ.பி.டி.பி.யும் அந்தக் கொள்கையைத்தான் முன்னெடுக்கின்றது. எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு இணக்கப்பாடு உண்டு -இவ்வாறு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஈ.பி.டி.பி.யின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

எங்களுக்கும்ஜே.வி.பி.க்கும் இடையிலான இணக்கப்பாட்டைப்பார்த்து தமிழ்க் கட்சிகளும், ஜே.வி.பி.யும் இணக்கத்துக்கு வந்தால் இணைந்து பணியாற்றத் தயார் என்கிறார்கள். இப்போது அவர்களுக்கு மக்களின் மனநிலை புரிந்துள்ளது. மக்களும் அதனைத்தான் எதிர்பார்க்கின்றார்கள்.

ஜனாதிபதி அநுரவை தமிழ்க் கட்சியைச் சேர்ந்த இருவர் நேரில் சந்தித்திருக்கின்றனர். அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளதாக ஒரு கதை இருக்கும் நிலையில், ஜனாதிபதியைச் சந்தித்து பட்டியலை வெளியிடவேண்டாம் என்று கோரியிருக்கின்றார். தேர்தலில் வென்ற பின்னர் உங்களுடன் இணைந்து வேலை செய்யவேண்டியிருக்கும். பட்டியலை வெளியிடவேண்டாம் என்று கூறியிருக்கின்றார். மற்றையவர், பட்டியலை வெளியிடுமாறு கோரியிருக்கின்றார். இதுதான் நிலைமை.

எங்களுக்கும் அரசுகளுக்கும் கடந்த காலத்தில் இருந்த உறவு மக்கள் நலன் சார்ந்ததே தவிர இவ்வாறு அல்ல - என்றார். (அ-ஒ-19)


## ஞான முகாம்

இந்தியாவில் இருந்து வருகை தர இருக்கின்ற ஞானியின் இரண்டு நாள் ஞான முகாம் ஸ்ரீ பகவத் ஐயா அவர்களின்



திகதி:
19th & 20th October 2024
(சனி & ஞாயிறு தினங்களில் )
இடம்:
சீரணி மஹால்
சீரணி சந்தி, சண்டிலிப்பாய்,
யாழ்ப்பாணம், இலங்கை.
நேரம்:
காலை 8.30 முதல் மாலை 6 மணி வரை
கலந்து கொள்வதனால் ஏற்படும் அனுகூலங்கள்
- ஆன்மீக தேடல் உள்ளவர்களிற்குரிய ஞான விடுதலை
- தியானமின்றி ஞானம் பெறும் வழி
- கவலைகள் அனைத்திற்கும் தீர்வு
- நடைமுறை வாழ்க்கையில் வெற்றி
- தெளிவான வாழ்க்கை

அனுமதி இலவசம்

"ஞானியரை வணங்குவது மட்டும் சிறப்பல்ல! நீங்களே ஞானியாக மலர்வதுதான் சிறப்பு!"
sribagavath.com (இலவசமாக புத்தகங்களை தரவிறக்கம் செய்து வாசிக்கமுடியும்)
Youtube - Bagavath Pathai (Tamil)
இந்நிகழ்ச்சி எந்த விதமான மதம் சார்ந்த விடயம் அன்று! மனம் சார்ந்த விடயம் ஆகும்! அனைவரும் வருக!
குறிப்பு: மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதனால் முற்பதிவு அவசியம்.
முற்பதிவுகளை whatsapp, Viber இன் ஊடாக உங்கள் விபரங்களை அனுப்பி பதிவு செய்து கொள்ளவும். தொடர்புகளுக்கு : 076 324 5333


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org